# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.20 (L.W.32)

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr.Ravichandran | Caste | : Hindu |
| Father's Name | : K.Gomesh | Calling | : S.I. (Retd) |
| Village | : Kaniyambadi Pudur | Religion | : அகமுடையார் |
| Taluk | : Vellore TK | Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.01.2025.

(A1 to A5 present, A6 absent and his absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் திருவண்ணாமலை மாவட்டம் மாவட்ட குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, கடந்த 2024ம் வருடம் மார்ச் மாதம் பணி ஓய்வு பெற்றேன். கடந்த 1984ம் வருடம் காவல்பணியில் சேர்ந்து, கடந்த 2015ம் வருடம் வேலூர் உட்கோட்டம் அரியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

அரியூர் காவல் நிலைய கு.எண்.226/2015 பிரிவு 174(1) கு,வி,மு,ச, (சந்தேக மரணம்) வழக்கில் வேலூர் உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் தனி அலுவலாக நியமிக்கப்பட்டு, வேலூர் மாவட்ட குற்ற ஆவண காப்பகத்திலிருந்து, பெண் காணாமல் போன 17 முதல் 25 வயது உள்ளவர்களின் பட்டியலை சேகரித்து விவரங்களை சேகரித்து கொண்டிருந்போது, 14.06.2015 அன்று காலை 10 மணிக்கு அரியூர் காவல் நிலையத்தில் பழனி என்பவர் நிலையம் ஆஜராகி, தான் கண்ணமங்கலத்திலிருந்து

வருவதாகவும், பேப்பரில் அழுகிய பெண் பிணம் ஒன்று பார்த்ததாகவும், தன் மனைவி காணாமல் போனதாகவும், பேப்பரில் சரியாக தெரியாததால், நேரில் வந்து விசாரித்ததாகவும், மேற்படி பழனியிடம் மேற்படி வழக்கில் சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் பொருட்களை அடையாளம் காட்டியபோது, பழனி, காணாமல் போன மனைவி இல்லை என்று கூறினார்.

மேலும் அவரை விசாரிக்க பழனியின் அக்கா இரண்டு செல்போன் நெம்பர்களை கொடுத்து, இதையும் தாங்கள் விசாரித்து விவரங்களை சேகரிக்குமாறு கேட்டுக் கொண்டு சென்றுவிட்டார். பழனியின் மனைவி பெயர் பவித்ரா என்று சொன்னார்.

மறுநாள் வந்து விவரங்களை கேட்டபோது, வாய்மொழியாக ஆம்பூர் முகவரியை கூறினேன். பழனி என்பவர் கொடுத்த செல்போன் நெம்பரின் முகவரி ஆம்பூரை சார்ந்தது என்ற விவரத்தை வாய்மொழியாக கொடுத்தேன். ஆம்பூரை சேர்ந்த ஷமில் பாஷாவின் முகவரியை பழனியிடம் வாய்மொழியாக சொன்னேன்.

அந்த பழனியிடம், ஷமில் பாஷாவின் முகவரியை வாய்மொழியாக சொல்லி அனுப்பினேன். தற்போது அந்த முகவரி ஞாபகம் இல்லை. போலிசாரிடம் சொல்லி உள்ளேன். ஆனால் அதை அவர்கள் எழுதவில்லை. என்னை CBCID போலிசார் விசாரணை செய்தார்கள்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை தனி அலுவலராக, 15 வயது முதல் 25 வயதுள்ள பெண்கள் காணாமல் போனதற்கு நியமித்ததற்கான ஆணையை நான்

CBCID–யிடம் கொடுக்கவில்லை. வேலூர் DSP அவர்கள், என்னை தனி அலுவலராக நியமித்தார். அந்த உத்தரவின் நகலை CBCID போலிசிடம் கொடுத்துள்ளேன். எந்தவித உத்தரவையும், நான் CBCID–யிடம் கொடுக்கவில்லை என்றும், அப்படி கொடுத்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

காணாமல் போனவர்களின் பட்டியலை CBCID போலிசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை. அந்த தினத்தில் காணாமல் போனவர்களை பற்றி விசாரித்தவர்களின் விவரங்களை நான் CBCID போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை.

சிறப்பு அதிகாரியாக பெண்கள் காணாமல் போன வழக்கை பற்றி நான் விசாரணை செய்த நிலையில், பழனி தனது மனைவி பவித்ரா காணவில்லை என்றும், செய்தித்தாளில் அழுகிய நிலையில் இருந்த பெண் பிரேதத்தை பார்த்து என்னை வந்து அவர் மனைவியின் சடலமா என்று என்னை விசாரித்த விவரத்தை நான் என்னுடைய டைரியில் குறித்துள்ளேனா என்றால் நான் பராமரித்த நோட்டில் குறிப்பிட்டுள்ளேன். அதன் அசலையோ, நகலையோ CBCID போலிசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் CBCID போலிசார் கேட்கவில்லை, அதனால் நான் கொடுக்கவில்லை.

பழனியிடம் ஏதேனும் அவருடைய அடையாள அட்டையோ அல்லது வாக்குமூலமோ வாங்கினேனா என்றால் இல்லை. அவர் குடும்ப போட்டோவை காண்பித்தார். பார்த்துவிட்டு கொடுத்துவிட்டேன்.

பழனி என்னிடம், அவருடைய அக்காவிற்கு 2 செல்போன் நெம்பர்களில் போன் வந்ததாக சொல்லி அந்த 2 போன் நெம்பரை எனக்கு கொடுத்து அது யாருடைய நெம்பர், மற்றும் எங்கிருந்து வந்தது என்று கேட்டதாக சொல்லிய நிலையில் அந்த ரகசிய தகவலை எந்த அடிப்படையில் 3ம் தரப்பினருக்கு நான் தெரியப்படுத்தினேன் என்றால் அது எந்த ஒரு ரகசிய தகவலும் இல்லை. பாதிக்கப்பட்ட நபருக்கு விஷயங்களை நாங்கள் சொல்ல வேண்டிய பொறுப்பில் இருக்கிறோம்.

Call details Cyber crime ல் இருந்து பெற்றதற்கான வேண்டுகோள் கடிதத்தை ஏதேனும் CBCID–யிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. Call details ல் வரும் நெம்பரை பொறுத்து ரகசியம் காக்கவேண்டும் என்ற சூழ்நிலையில் உள்ளதால், 3ம் தரப்பினருக்கு சொல்ல வேண்டிய சூழ்நிலை இல்லாததால் எதன் அடிப்படையில் பழனிக்கு சொன்னேன் என்றால் பாதிக்கப்பட்டவர் என்பதால் சொன்னேன்.

சாட்சியத்தில் சொன்ன பல விஷயங்களுக்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதி, நேரத்தில் பழனி என்பவர் என்னை சந்திக்கவில்லை என்றால் சரியல்ல. சந்தித்தேன்.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 2013 ல் இருந்து அரியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். லத்தேதி காவல் நிலையத்தில் 2016–ல் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு Rough duty roaster register உண்டு. அதன் வலது பக்கத்தில் தினசரி பணி விவரம் வரும். அதன் இடது பக்கத்தில் சிறப்பு பணி உத்தரவுகள் பதியப்படும். நான் சாட்சியம் அளித்த விவரங்கள் அரியூர் காவல் நிலையத்திற்கு சம்மந்தப்பட்டது.

என்னை சிறப்பு அதிகாரியாக டி.எஸ்.பி. அவர்கள் நியமித்த உத்தரவை CBCID போலிசிடம் காட்டினேன். ஆனால் அதன் நகலையோ, உத்தரவையோ கொடுக்கவில்லை.

பழனி ஆம்பூரிலிருந்து வந்து என்னிடம் தகவல் கேட்டதற்கு அவர் என்னுடைய காவல் நிலைய ஆள்வரைக்குள் சம்மந்தப்பட்ட நபர் இல்லாத நிலையில் எங்கள் காவல் நிலைய விஷயங்களை ரகசியமாக பாதுகாப்பதை விட்டுவிட்டு வருவோர், போவோருக்கெல்லாம் எதன் அடிப்படையில் எங்கள் நிலைய தகவலை சொல்ல இயலும் என்றால் அவர் பாதிக்கப்பட்டவர் என்பதால் நான் அந்த தகவலை கொடுத்தேன். என்னுடைய எல்லைக்குட்பட்டவருக்கு தான் நான் அலுவல் சார்ந்த விவரங்களை சொல்ல முடியும் என்றாலும், பழனி வேறு எல்லையில் இருந்து வந்ததால், அந்த தகவலை நான் கொடுக்க இயலாது என்றால் சரியல்ல.

Call details எடுப்பதற்கு சைபர் கிரைம் போலிஸ் உள்ள நிலையில் கேட்பவர்க்கு எல்லாம் Call details எடுத்து என்னால் கொடுக்க இயலாது என்றும், பழனிக்கு என்னால் கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. 2015 ல் பாதிக்கப்பட்டவர்கள் தொலைபேசி எண்ணை டுத்து எந்த எண் எங்கிருந்து அழைப்பு வந்தது என்று கேட்டால் காவல் நிலையத்தில் உள்ள நாங்கள் அறிவியல் பூர்வமாக தேடி வாய்மொழியாக சொல்வோம். பின்னர் சைபர் கிரைம் தனி பிரிவு வந்ததால் விவரங்கள் கொடுக்க தடைப்பட்டுள்ளது.

2015 ல் சைபர் கிரைம் மூலம் தான் Call details எடுக்க முடியும் என்ற நிலை இருந்தது என்றும், உயர் அதிகாரியின் உத்தரவு இல்லாமல் ரகசிய தகவல் கொடுக்க முடியாது என்றால் சரிதான். ஆனால் அப்போது என்னுடைய உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் தான் கொடுத்து இருப்பேன். உதவி ஆய்வாளரை கேட்டுத்தான் கொடுத்திருப்பேன் என்று ஞாபகம்.

CBCID வாக்குமூலத்தில் ஷமில் பாஷா என்று எந்தஒரு பெயரையும் நான் சொல்லவில்லை. CBCID சொன்னதற்கு இணங்க வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.21 16:17:00 +0530